


மீஞ்சூர் ஊராட்சி ஒன்றியம்
கொடூர் ஊராட்சி

உத்தேச குடியிருப்பு மனைப்பிரிவிற்கான தொழில்நுட்ப அனுமதி வரைபடம்
(திட்டமில்லாத பகுதி)

மாவட்டம்	திருவள்ளூர்
வட்டம்	பொன்னேரி
உள்ளாட்சி	கொடூர்
கிராமம்	தடப்பெரும்பாக்கம்-I
நில அளவை எண்கள்	66/1A1A,2B & 5
அளவு	1 : 400(1"=33')
இணையதள விண்ணப்ப எண்	MMDS/BL

குறிப்பு

மனைபிரிவு இடத்தின் பரப்பு	9400.00 ச.மீ. (2.32 ஏக்கர்)
சாலைக்குரிய பகுதி	3277.0 ச.மீ.
சாலையின் பரப்பு போக	
மனைப்பிரிவு இடத்தின் பரப்பு	6123.0 ச.மீ.
கோரிய மனைகள்	72
ஒதுக்கிய மனைகள்	60

பொது ஒதுக்கீடுகள்

உள்ளாட்சிக்கு தானமாக ஒப்படைக்கப்பட்ட பகுதி

பூங்கா	621.00 ச.மீ (10.14%)
உள்ளாட்சிக்குரிய பகுதி	36.90 ச.மீ (0.60%)
TANGEDCO-உரிய பருதி	36.00 ச.மீ (0.58%)

மனைபிரிவு இடத்தின் எல்லை	
நிலையிலுள்ள சாலை	
உத்தேச மனைப்பிரிவு சாலை	

கட்டிட வரம்பு	7.20மீ அகல சாலைகளுக்கு - 1.5மீ. 9.00மீ அகல சாலைகளுக்கு - 3.0மீ.
முலை முடகு	12.0மீ அகல சாலைகள் வரை - 1.5மீ x 1.5மீ.

நிபந்தனைகள்

1. அரசாணை எண்.18 மற்றும் எண்.15, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, நாள்.04.02.2019 மற்றும் 31.01.2020-படி சாலைகள் மற்றும் முலை முடக்கு ஆகிய நிலப்பரப்பினை மனுதாரர் தானப்பத்திரம் மூலம் உள்ளாட்சிக்கு ஒப்படைப்பு செய்த பின்னரே இம்மனைப்பிரிவுக்கு இறுதி ஒப்புதல் உள்ளாட்சியால் வழங்கப்பட வேண்டும்.
2. இம்மனைப்பிரிவுக்கு உள்ளாட்சியால் ஒப்புதலளிக்கும் முன் இடத்தில் எந்தந்த துறையாலும் நில ஆர்ஜித நடவடிக்கை எடுக்கப்படவில்லை என்றும், நில ஆர்ஜிதம் செய்து தரக்கோரி மாவட்ட வருவாய் அலுவலரிடமிருந்து உத்தேசங்கள் ஏதும் பெறப்படவில்லை என்றும் உள்ளாட்சி நிர்வாக அதிகாரி உறுதி செய்துகொள்ள வேண்டும்.
3. நில உரிமம் குறித்து சமர்பிக்கப்பட்ட சான்றுகள் மற்றும் பரிசீலனைக்குச் சமர்பிக்கப்பட்ட ஆவணங்கள் சரியானவை அல்ல என அறியப்பட்டால் அல்லது மனைப்பிரிவுக்குத் தொழில்நுட்ப ஒப்புதல் வழங்கியதால் பாதிப்பு ஏற்படக்கூடிய சூழ்நிலை ஏற்படின், மனைப்பிரிவுக்கு வழங்கப்பட்ட தொழில்நுட்ப ஒப்புதல் எவ்வித முன்னறிவிப்புமின்றி நகர் ஊரமைப்பு இயக்குநர், சென்னை அவர்களால் ரத்து செய்யப்படும்.
4. இவ்வலுவலகத்தால் தொழில் நுட்ப ஒப்புதல் அளிக்கப்படும் மனைப்பிரிவு மனைகள் வாங்கும் எவரொரு மனுதாருக்கும் ஒப்புதலளிக்கப்பட்ட மனைப்பிரிவு வரைபட நகல் வழங்கப்பட வேண்டும்.
5. இவ்வலுவலகத்தால் தொழில் நுட்ப ஒப்புதல் அளிக்கப்படும் மனைப்பிரிவு வரைபடத்தினை பொதுமக்கள் பார்வைக்காக சம்மந்தப்பட்ட இடத்தில் 6'x4' என்ற அளவுக்குக் குறையாமல் காணுமிடம் பலகையில் வரைந்து வைக்கப்பட வேண்டும்.

திறப்பு நிபந்தனை

நகர் ஊரமைப்புத் துறை சட்டபூர்வமாக தொழில்நுட்ப அனுமதி அளிப்பதன் மூலம் விண்ணப்பதாரரின் மேலில் உள்ள நில உரிமையை உறுதிப்படுத்தவில்லை. தொழில்நுட்ப அனுமதி நிபந்தனைகளை முன்பு விண்ணப்பதாரரின் விண்ணப்பத்துடன் சமர்பித்த ஆவணங்களில் (கிரய பத்திரம், குத்தகைப் பத்திரம், பட்டா, தானப்பத்திரம், பொது அதிகார பத்திரம் மேலும் பல) விண்ணப்பதாரர் வரைச்சி செய்ய உரிமையுள்ளதா என்று மட்டுமே சரிபார்க்கப்படுகிறது. அதன் மூலம் முதற்கட்டமாக விண்ணப்பதாருக்கு வரைச்சி செய்ய உரிமையுள்ளதா என்று பார்க்கப்படுகிறது.

சொத்தினை வாங்க விரும்பும் ஒரு நபரும் விண்ணப்பதாருக்குச் சொத்தின் மீது உள்ள உரிமையை தனியாக உறுதிப்படுத்திக்கொள்ள வேண்டும். மேலும், அதனிமல் வேறு யாரேனும் தவறான உரிமை கோரினால் அவர்கள் பொருத்தமான அதிகாரமுள்ள நீதிமன்றத்தில் முறையிட்டுத் தீர்த்துக்கொள்ளலாம். இதனால் ஏதேனும் பாதிப்பு ஏற்படும் பட்சத்தில் நகர் ஊரமைப்புத் துறை பொறுப்பாளாது அல்லது ஏற்காது.

APPROVAL NO: SWP/DTCP/TVLR/LAYOUT No: 35/2024

உதவி இயக்குநர்,
மாவட்ட நகர் ஊரமைப்பு அலுவலகம்,
திருவள்ளூர் மாவட்டம்

ஊராட்சி மன்றம்
எண்...209...நாள்.28-02-24
நடவடிக்கை மேற்கொள்ள அனுமதி
வழங்கி உத்தரவிடப்படுகிறது
M.சுகன்யா
தலைவர்
ஊராட்சி மன்றம்
மீஞ்சூர் ஒன்றியம்

Signature valid